RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2533

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் காலப்பின்னணி

ப. பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் – 628215, இந்தியா

# Rajam Krishnan Navalkalil kaalappinnani

P. Priya [a, *]

[a] Department of Tamil, Govindammal Aditanar College for women, Tiruchendur – 628 215, India

* Corresponding Author: priyatharmakumar@gmail.com

Received: 22-11-2025
Revised: 28-02-2026
Accepted: 06-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

The time period (Kaalappinnani) is an essential element in a novel. It clarifies the place where the story takes place, the surrounding environment, and the time period. It also helps in shaping the characters' personalities. This setting can be of various types, based on place, time, society, and history. This article attempts to understand how the setting is structured in three of Rajam Krishnan's novels: Kurinjithen (1963), Valaikkaram (1969), and Alaivaikkaraiyil (1975), all of which depict the problems of different social groups.

**Keywords:** Kaalappinnani, Time Period, Rajam Krishnan, Novels, Valaikkaram, Alaivaikkaraiyil, Kurinjithen.

## முன்னுரை

ஒரு நாவல் எப்படி எழுதுவது என்று யாரும் யாருக்கும் கற்றுக் கொடுக்க முடியாது. தமிழ் நாவல்களின் பின்னணி என்பது சுவாரஸ்யமானது. தமிழில் முதலில் தோன்றிய நாவல் பிரதாப முதலியார் சரித்திரம் ஆகும். இது மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் 1879 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இத்தகைய நாவல் வரிசையில் இடம் பெற்றுள்ள ராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் காலப்பின்னணி பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழ் நாவல் இலக்கியத்தின் பின்னணி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழில் செய்யுள் வடிவ அல்லது கதைப்பாடல்கள் வடிவிலான கதைகளே பிரதானமாக இருந்தன. ஆரம்ப கால நாவல்கள் பெரும்பாலும் பெண்களின் பிரச்சினைகள் மற்றும் சமூக அவலங்கள் பற்றி பேசின. உதாரணமாக, ராஜம் கிருஷ்ணன் போன்ற மூத்த எழுத்தாளர்கள் பெண் அடிமை நிலையையும் பிற சமூக குற்றங்களையும் தங்கள் படைப்புகளில் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தனர்.

## காலப் பின்னணி

நாவலில் இன்றியமையா பங்களிப்பது பின்னணியாகும். இது கதை நிகழுமிடம், சுற்றுப்புற சூழல், காலம் முதலியவற்றை தெளிவுபடுத்துவது ஆகும். அத்துடன் கதை மாந்தர்களின் பண்பை உருவாக்கவும் இது உதவும். இப்பின்னணி இடம், காலம், சமுதாயம், வரலாறு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல வகைகளாக அமையும்.

ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் குறிஞ்சித்தேன்(1963), வளைக்கரம்(1969), அலைவாய்க்கரையில்(1975) ஆகிய மூன்று நாவல்களும் வேறுபட்ட சமுதாயத்தினரின் சிக்கல்களை

விளக்குவதாக அமைந்துள்ளன. இம்மூன்று நாவல்களிலும் காலப்பின்னணி அமையுமாற்றை அறிய முற்படுகிறது இக்கட்டுரை.

## கதைப் பின்னணி

சிருஷ்டிக்கு ஆழமும் அர்த்தமும் தருகிற முறுக்கேற்றுகிற சரடுகளில் காலம் என்கிற சரடு முக்கியமானது. சுப்பிரமணியம் காலப்பின்னணியின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார். காலப் பின்னணி அதனை எடுத்துரைக்கும் நிலையிலேயே அமைந்து விடும். கால வரிசைப்படி அமைவதும் கால முறைமையைச் சிதைத்துத் தொகுப்பு நிலையில் கூறப்படுவதும் என கதைப்பின்னலுக்குக் காலப் பின்னணி முதன்மை துணையாவதை அறிய இயலும்.

காலப் பின்னணியைக் கதை நிகழும் கால கட்டத்தின் அளவு, கதையில் அது எவ்வாறு எத்தகைய சொற்களால் குறிக்கப்படுகின்றது என்ற இரு நிலைகளில் காணலாம்.

கதை நிகழும் மொத்த கால கட்டத்தில் மிக நீண்டதொரு காலத்தை பின்னணியாகக் கொண்டு ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் முதலிடம் பெறுவது குறிஞ்சித்தேன் நாவலாகும். இந்நாவலில் ஜோகி என்பவன் ஒன்பது வயது சிறுவனாக அறிமுகமாகி முடிவுரையில் ஐந்து குறிஞ்சிகளைக் கண்ட ஜோகி கிழவராகக் காட்டப்படுகிறார். ஐந்து குறிஞ்சி என்று கூறும் போது அறுபது வருடங்களை அது குறிக்கின்றது. முடிவுரையில் மூன்று ஆண்டுகள் கழிந்தன என்றும், கதை தொடக்கத்தில் ஜோகியின் வயது ஒன்பது என்றும் கூறுவதை கழித்து நோக்கும் போது ' குறிஞ்சித்தேன்' நாவல் கதை நிகழும் காலக்கட்டம் நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஆகும். இக்கதை பின்னோக்கு உக்தி இன்றித் தொடக்கத்திலிருந்து நாற்பத்தெட்டு ஆண்டு காலக்கதை சீராகச் சொல்லப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிட்டதொரு செய்தியாகும்.

'வளைக்கரம்' நாவல், பதினான்கு ஆண்டுகால கதையையும், 'அலைவாய்க்கரையில்' நாவல் ஏழெட்டு ஆண்டுகால கதையோட்டத்தையும் கூறுகின்றன.

கதை நிகழ்ச்சி நடைபெறும் காலப் பின்னணியை மணி, கிழமை, ஒரு நாளின் உட்பிரிவுகளாக காலை, மாலை, உச்சி, அந்திப்பொழுது, பருவங்களின் பெயர், தமிழ் மாதப் பெயர், ஆங்கில மாதப் பெயர் ஆகியவற்றால் குறிப்பிட்டு சொல்லுகின்ற அமைப்பு இவரது நாவல்களில் காணப்படுகின்றது. மேலும், ஆண்டுகள் கழிவதை எண்ணால் கூறுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. ஆனால் ' குறிஞ்சித்தேன்' நாவலில் மட்டும் ஆண்டுகள் கழிவதை பாடகர்களின் வழக்கப்படி ' குறிஞ்சி' என்றே குறிப்பிட்டுச் சொல்லுகின்ற அமைப்பு இந்நாவலில் பல இடங்களில் காண முடிகின்றது. மேலும், குறிஞ்சி என்ற சொல்லைப் பாடகர்களிடையே பண்பாட்டு மாற்றம் ஏற்படுவதற்கு முன்பு மட்டுமே ஆசிரியர் கையாண்டு இருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## வளைக்கரம் நாவல்

'வளைக்கரம்' நாவலில் நேற்று ' துளசி கல்யாணம்' என்றும் இன்று ' துளசி கல்யாணம் கழிந்த மறுநாள்' என்றும் 'மகர சங்கராந்தி கழித்து' என்றும் ' பாலகுணமாகத் திருநாளின் போது' என்றும் பிப்ரவரி மாதத்தில் தவசு மாதம் என்றும் விரத நாட்கள் தொடங்குவதற்கு முன் மூன்று நாட்கள் ' முழுக்க முழுக்க உல்லாசம் கொண்டாடும் கார்னிவல் நாட்களாயிற்றே' என்றும் காலத்தை கோவாவில் நடக்கும் திருவிழா போன்ற நிகழ்ச்சிகளின் பெயர்கள் தொடர்பால் குறிப்பிட்டுச் சொல்வதைக் காண முடிகின்றது.

கதை மாந்தர்களின் கருத்துக்கேற்ப காலப் பின்னணி அமைவது இவரது நாவல்களில் அருகிக் காணப்படுகின்றது. வானமடைத்துக் கொட்டும் சூலை மாதம் ஒவ்வோர் ஆண்டும் வரும் மழைக்காலம் தான். ஆனால் இவ்வாண்டு அது வழக்கமான பருவ மழைக் காலமாக ஈசனுக்குத் தோன்றவில்லை. முறுக்கிக் கூட்டிய இழைகளெல்லாம் பிரிந்துப் போய் விட்டனவே. நின்ற கால் நிலையாமலே உழைத்தால் தான் அரும் பாடுபட்டு திரட்டிக் குவித்த மன உறுதிகள் சின்னாப்பின்னமாய் போய் விட்டனவே என்று போர்த்துகீசிய அரசு கோவனிய விடுதலை இயக்கியத்தினரிடம் நடந்து கொண்ட முறையில் சிதறிவிட்ட அவர்கள் நிலையை ஒரு கதை மாந்தர் எண்ணிப் பார்ப்பது அக்காலப் பின்னணியை ஒட்டி அமைந்துள்ள பாங்கினைப் புலப்படுத்துகின்றது.

## அலைவாய்கரையில் நாவல்

'அலைவாய்க்கரையில்' நாவலில் காலத்தை மீன் பிடிக்கும் பரதவர் வாழ்வில் தொடர்புடைய பருவத்தைக் குறிக்கும் சொல்லாலும், நேரத்தை விண்மீன்களின் தோற்றம் வானில் சூரியனின் இருப்பிடம் ஆகியவற்றை குறிக்கும் சொற்களாலும் குறிப்பிட்டுச் சொல்லுகின்றத் தன்மையை காணமுடிகின்றது.

மேல் காற்று அடை மழை காலத்தை கச்சானடை” என்றும் சிறு மீன்கள் பாடு இல்லாத மாசி, பங்குனி காலத்தை ’ தற்காலம்’ என்றும் பரதவர்களின் வழக்கத்திலுள்ள சொற்கள் மூலம் குறிப்பிடுவதைக் காண முடிகின்றது. மேலும், ஐப்பசி அடைமழை கார்காலம், சித்திரை பௌர்ணமி கோடைக்காற்று துவங்கும் காலம். கார்த்திகை முடிந்து மார்கழி பிறந்ததுமே வாடைக் காற்றுக் காலம். ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி எல்லாம் இறால் காலமயிற்று என்று மாதப் பெயர்களையும் பருவப்பெயர்களையும் சுட்டிக் காட்டி காலப்பின்னணி அமைவதைக் காணலாம். அத்துடன் அக்காலக் கட்டத்தில் கிடைக்கும் மீனைச் சேர்த்துக் கூறுகின்ற கால அமைப்பையும் இந்நாவலில் காண முடிகின்றது.

மேலும், ஒரு நாளின் நேரத்தை மணியில் குறிப்பிடாமல் பொழுது உச்சிக்கு வந்து விடுகிறது என்றும், பொழுது சாயும் நேரம் என்றும், பனி வெயில் மாலை நேரத்தை பொன் முலாம் பூசிக் கொண்டிருந்தது என்றும் பகல் நேரத்தினை குறிப்பிடக் காண்கிறோம்.

மாலை, இரவு நேரங் களை ‘மாலைப்பூசை’ நேரமென்றும் வானில் எங்கோ ஒரு ஒற்றைத் தாரகை மினுக்மினுக்கென்று தெரிகிறது என்றும் ஆறாங்கோட்ட வெளி இல்லை என்றும் பரதவர்களின் வழக்கப்படியே ஆசிரியர் இந்நாவலில் குறிப்பிட்டுச் சொல்வதைக்காணலாம்.

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணன் வேறுபட்ட மூன்று சமுதாயத்தினரைப் பற்றிக் குறிஞ்சித்தேன், வளைக்கரம், அலைவாய்க்கரையில் என்ற மூன்று நாவல்களிலும் அந்தந்த சமுதாய சூழலுக்கேற்ற சொற்களாலும் அவரவர் பழக்கத்திலுள்ள விழாக்கள் பெயராலும் தொழில் தொடர்பான சொற்களாலும் காலப்பின்னணியை அமைத்துள்ள நுட்பம் பாராட்டுதற்குரியது. இவ்வமைப்பு குறிப்பிட்ட கதை மாந்தர்களின் கதையை சொல்லும் போது அவர்கள் வாழும் பின்னணியில்தான் சொல்ல முடியும். ஏனெனில் மனித வாழ்க்கை அந்த அளவுக்கு அவர்கள் வாழும் மண்ணிலே வேர் கொண்டிருக்கிறது என்றக் கூற்றுக்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது எனில் மிகையில்லை.

## References

ராஜம் கிருஷ்ணன், (1963) குறிஞ்சித் தேன், கலைமகள் காரியாலயம், சென்னை

ராஜம் கிருஷ்ணன், (1978) அலைவாய்க் கரையில், பாரி புத்தகப் பண்ணை, சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License